**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.1** |
| **Name** | **:** | திருமதி. சுசீலா |
| **Father's Name** | **:** | திரு. ஜெகநாதன் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரிகள் 1 முதல் 10 ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.06.2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் குடும்ப தலைவியாக உள்ளேன். இறந்த சுரேஷ் என்னுடைய மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் மகன் இறந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியாது. எங்கள் ஊரில் பொது இடத்தில் நாகப்பனை வீடு கட்ட வேண்டாம் என்று ஊர் மக்கள் கூடி சொன்னார்கள்.

என் மகனும் சென்று வீடு கட்ட வேண்டாம் என்று சொன்னார்.

புறம்போக்கு இடத்தில் வீடு கட்டாதே உன் இடத்தில் வீடு கட்டு என்று என் மகன் சொன்னார். என் மகன் அரசு போக்குவரத்து கழக பூந்தமல்லி பணிமனையில் நடத்துநராக பணிபுரிந்து வந்தார். தடுத்ததில் ஒருவருக்கொருவர் பிரச்சனையாகி விட்டது. அதை தடுத்து சரி செய்து அனுப்பிவிட்டார்கள்.

ஒரு வருடம் கழித்து குடியரசு தினம் வந்தது. பழைய முன்விரோத்தை மனதில் வைத்து கொண்டு எதிரி ஞானவேல் என்பவர் கருப்பு நிற ஜட்டி அணிந்துக் கொண்டு தகாத வார்த்தைகளால் என்னை பார்த்து பேசிக் கொண்டிருக்கும் போது எதிரி அமுலரசி என்பவர் ஒரு பெண்ணிடம் எதற்காக ஜட்டியுடன் சென்று சண்டையிடுகிறார் என்று கேட்டார். அதற்கு ஞானவேல் ஜட்டியுடன் வந்து உன்னிடம் தான் வரப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டே வந்து என் முடியை பிடித்தார்.

அமுலரசி, நவநீதம், தீபா ஆகியோர் என் தலைமுடியை பிடித்து இழுத்தார்கள். முடியை பிடித்து இழுக்கும் போது என் மருமகள் 7 மாத கர்ப்பிணியாக உள்ளார், அவர் வந்து தடுத்தார். அதற்கு பின்னால் என் மகன் பணியை முடித்துவிட்டு வந்தார். அந்த சண்டையில் ஞானவேல், இளையவேல், நாகப்பன், தனசேகரன், அமுலரசி, தீபா, நவநீதம், நீலா ஆகியோர் என்னை பிடித்து அடித்து பின்னால் என் ஜாக்கெட்டை கிழித்துவிட்டார்கள். ஞானவேல் என் மார்பின் மீது எட்டி உதைத்தார்.

என்னை அடித்ததில் நான் மயங்கிவிட்டேன். என் மருமகன் என் மகனிடம் சொன்னார். என் மகன் அப்போது தான் பணியிலிருந்து வந்தவர் இரு சக்கர வாகனத்தை அப்படியே போட்டுவிட்டு என்னை பிடிக்க

வந்த என் மகன் அவர்களிடம் மாட்டிக் கொண்டார். என் மகன் தனியாக மாட்டிக் கொண்டார். அந்த 8 பேரும் என் மகனை அடித்து, சட்டையை கிழித்து, ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்துவிட்டார்.

பிறகு நாங்கள் இருவரும் காவல் நிலையம் சென்று பிறகு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு போய் சேர்ந்தோம். என் மகனுக்கு தலையில் 8 தையல்கள் போட்டார்கள். எனக்கு 6 குளுக்கோஸ் ஏற்றினார்கள். நான் கொடுத்த வழக்கு நடத்தப்படவில்லை. தூசி காவல் நிலையத்திலேயே எங்கள் வழக்கு உள்ளது. நாகப்பன் என்பவர் ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதால் எங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. நானும் என் மகனும் மருத்துவமனையில் சிசிக்சை பெற்றுக் கொண்டு தூசி காவல் நிலையத்தில் 15 நாட்களாக கையொப்பம் போட்டுக் கொண்டிருந்தோம்.

பிறகு 1 வருடம் கழித்து எதிரிகள் ஞானவேல், இளையவேல், தனசேகர், நாகப்பன் ஆகியோர் கத்தி எடுத்துக் கொண்டு இவர்களை இனி விடக் கூடாது என்று சொல்லிக் கொண்டு இளையவேல் என்பவர் கடப்பாறையை எடுத்துக் கொண்டும், நீலா என்பவர் தொடப்பக்கட்டையை எடுத்துக் கொண்டும், தீபாவும் வந்தார்.

ஞானவேல், தனசேகர், இளையவேல் ஆகியோர் எங்கள் கதவை இடித்தார்கள். நான் உள்ளேயே இருந்தேன். பிறகு என் மகன் பணியிலிருந்து வந்த பிறகு நான் நடந்தவற்றை கூறினேன். பிறகு எதிரிகள் என் மகனின் இரண்டு சக்கர வாகனத்தின் ஒலியை கேட்டு மீண்டும் எங்கள் வீட்டிடம் வந்துவிட்டார்கள். என் மகன் தூசி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி சென்றார். நான் வெளியில்

வந்து பார்த்த போது தீபா, அமுலரசி, நீலா, நவநீதம் ஆகியோர் இவன் இதோ போராண்டா என்றும், இவன் திரும்பி வரக் கூடாது என்றும் சொன்தை நான் கேட்டேன். அதன்படி என் மகன் மீண்டும் வீட்டிற்கு வரவில்லை.

தீபா என்பவர் அவன் காவல் நிலையத்திற்கு சென்று திரும்பி வரக் கூடாது என்று தூண்டி விட்டதில் எதிரிகள் 5 பேரும் இரு சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு சென்றதை நான் பார்த்தேன். நான் சென்று ஊர் மக்கள், தலைவரை அழைத்த போது வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். விஜயமணி, உமேஷ், வடிவேலு, மோகன் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு பு துப்பாளையம் காவாங்கரையிடம் சென்றேன்.

நான் சென்று பார்த்த போது என் மகன் என்னை அம்மா என்று அழைத்த போதே என் மகன் இறந்துவிட்டார். எதிரிகள் அனைவரும் முகமூடி போட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தார்கள்.

(சாட்சி மிகுந்த அழுகையினால் அசுவாச படுத்த முடியாத நிலையில் இருப்பதால் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது ).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.